**செ. கு. எண்: 103** **நாள்:25.04.2013**

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை – 25.4.2013

கோயம்புத்தூர் அவினாசி சாலை, லட்சுமி மில்ஸ் சந்திப்பு அருகில் இயங்கி வரும் தனியார் வணிக வளாகத்தில் 25.4.2013 அன்று ஏற்பட்ட தீ விபத்தில், திரு. ராஜகோபால் என்பவரின் மகள் செல்வி கீர்த்தனா, திரு. செல்வராஜ் என்பவரின் மனைவி திருமதி விஜயலட்சுமி, திரு. ஜான் என்பவரின் மனைவி திருமதி மார்கரெட் மேரி மற்றும் செல்வி ஸ்ரீலட்சுமி ஆகிய நால்வரும் தீயில் சிக்கி உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்தத் தீ விபத்தில் அகால மரணமடைந்த கீர்த்தனா, விஜயலட்சுமி, மார்கரெட் மேரி மற்றும் ஸ்ரீலெட்சுமி ஆகியோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த தீ விபத்தில், அப்போது கட்டடத்திலிருந்த ஐந்து நபர்களும், கோயம்புத்தூர் (கணபதி) தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையத்தின் நிலைய அலுவலர் திரு. எம்.ராமு, முன்னணித் தீயணைப்போர் திரு. எம்.ரகுநாதன், தீயணைப்போர் திரு. முருகன் ஆகியோர் காயமடைந்துள்ளனர் என்பதை அறிந்து நான் மிகவும் வருத்தமடைந்தேன். காயமடைந்து மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வரும் இவர்களுக்கு நல்ல முறையில் சிகிச்சை அளிக்க மருத்துவமனை அதிகாரிகளுக்கும், கோயம்புத்தூர் மாவட்ட நிருவாகத்திற்கும் நான் உத்தரவிட்டுள்ளேன். இவர்கள் அனைவரும் விரைவில் பூரண குணமடைந்து வீடு திரும்ப வேண்டும் என்ற என்னுடைய விருப்பத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த தீ விபத்தில் உயிரிழந்த கீர்த்தனா, விஜயலட்சுமி, மார்கரெட் மேரி மற்றும் ஸ்ரீலெட்சுமி ஆகியோரின் குடும்பங்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா 25,000/- ரூபாயும், சாதாரண காயமடைந்தவர்களுக்கு தலா 10,000/- ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை.9**